# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்:மூன்று கணை: இருபது ஒக்டோபர்,நவம்பர் ~ 2022



சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.



**தொடர்புகளுக்கு**
guruseththiram@gmail.com


# பொருளடக்கம்

பக்கம்


- ஆசிரியரின் உள்ளத்திலிருந்து — 01
- காட்சியும் கருத்தும் — 02
- ஆசிரியத்துவம்: — 03
- மண்பானையும் அவனும் — 05
- ட்ரைவர் மங்களவின் நெறியும் கொழும்பு மாளிகையின் வெறியும் — 06
- தனது மகனின் ஆசிரியருக்குலிங்கன் எழுதிய புகழ் பெற்ற கடிதம் — 08
- இலங்கையின் கல்வி அன்றும் இன்றும் — 10
- இறந்த தந்தை குரல் கனவில்... — 13
- பவளப் பனுவல்கள் — 13
- “இன்பா”வின் சிந்தனைத் தொடர்கள் -- 10 கதைகளால் நிஜமாகி... — 14
- மனிதனை உருவாக்கும் கல்வி — 15
- மரம் — 17
- பேசும் படங்கள்...! — 19


குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப் பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவர்கள்!

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து…

**"If you don't you want to change the way of the proceedings……"**

Then….. don't talk about the 21st century Social skills…

குருசேத்திரம் கணை 19 சஞ்சிகைக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். குருசேத்திரம் குழுமமானது தனது இலக்கு நோக்கிய பயணத்தில் சில அடையாளங்களை மக்களிடத்தில் இட்டுவருகின்றது என்பதில் குழுமத்தின் தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

குருசேத்திர குழுமத்தின் முயற்சியால் அறிவுப்பகிர்வுத் தொடர் 98ஐத் தாண்டி பல்வேறு பங்களிப்பினை நிகழ்நிலையில் வழங்கிவருவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், இம்முயற்சியில் பங்களிப்புச்செய்யும் அனைவரையும் வாழ்த்துவதுடன் நன்றிகளையும் பகிர்ந்துகொள்கின்றேன்.

**எனவே நாம், நமது ஒவ்வொரு செயலாற்றுகைகளிலும்** ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் எம்மிடமுள்ள வளங்களின் அடிப்படையில் எமது செயற்பாடுகளை நாமே வகுத்துக் கொள்வோம். அதாவது அடுத்தவரில் தங்கிநிற்கும் அடிமைத் தனங்களைத் தகர்த்தெறிந்து எம்மிலே நேர்வகையான மாற்றங்களை உள்வாங்கிக்கொள்வதன் மூலம் எதிர்கால சமூகத்தினருக்கு முன்னுதாரணமானவர்களாக இயலுமான வரை வாழ்ந்துகாட்டுவோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை…

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் இரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது. குருசேத்திரம் உங்களின் களம்… அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

✉ gurusehththiram@gmail.com

# காட்சியும் கருத்தும்

திரு. சு. பரமானந்தம்



# ஆசிரியத்துவம்:

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



படம்: கீர்த்திகா (சித்திரத்துறை)

கல்விச் சிந்தனையாளர் பெஸ்டலோசியின் சிந்தனையானது ஆசிரியத்துவமானது குழந்தையினது **சிந்தனையாற்றல்கள், தனித்துவங்கள், ஆக்கத்திறன்கள் வளர்வதற்கு உதவ வேண்டும்** என்பதாக அமைந்தது.

குழந்தைக் கல்விச் சிந்தனையாளர் மொண்டோசூரி அம்மையாரின் சிந்தனையோ ஆசிரியனின் பணி கற்பித்தல் அல்ல **இயக்குனராக இருந்து பிள்ளைகளுக்கு வழிகாட்டுவதும் ஊக்கம் அளிப்பதுமே** என்பதாகத் தொடர்ந்ததும் - **தமது மாணவர்களை அவர்களது சொந்த அறிவு, ஆய்வு இவற்றில் ஈடுபடுத்துவதனூடாகச் செயலாக்கங்களைத் தூண்டுவதும் அவர் பணியாகும் என்றவாறாக அமைந்தது.**

ஒரு விளைதிறனுள்ள ஆசிரியர் மெல்லக்கற்கும் மாணவர் விடயத்தில் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தி கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளுவார். அவற்றில் சிலவற்றை ஆசிரியர் சார்பாக நோக்குவோம்.

## 1. ஆசிரியரின் மனப்பாங்கு

ஆசிரியர் கற்றல் என்றால் என்ன என்பது பற்றிய தெளிவான விளக்கத்தை மாணவர் சார்பாகக் கொண்டிருத்தல், அதாவது கற்றல் என்பது எல்லா மாணவர்களிலும் காணப்படும் ஒரு செயற்பாடாகும்.

- ஒருபோதும் நிறைவுபெறுவதில்லை
- தனிநபர் சார்ந்தது,
- ஒவ்வொரு தனிநபரினதும் கற்றல் வேகம் மாறுபாடானது
- பல்வேறு வகையான சமூகச் செயற்பாடுகள் மூலம் கற்றல் நிகழ்கின்றது.
- மகிழ்வூட்டும் செயற்பாடுகளினூடாக கற்றல் மேம்படுத்தப்படும்.

## 2. ஆசிரியரின் திறன்கள்

மாணவரின் கவனத்தை அடிக்கடி ஈர்த்தல் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும்போது மாணவரை கற்றல்செயற்பாடுகளில் ஈடுபடுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

குரலின் உச்சரிப்புகளை மாற்றுதல், மாணவரின் செயற்பாடுகளைக் கூறி அழைத்தல்,

மேசையில் தட்டுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் மாணவர் கவனத்தை ஈர்த்தல், மாணவர்களுக்கு தெரிந்த விடயங்கள், விருப்பமான தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ளுதல், இயலுமானவரை எல்லா மாணவர்களுக்கும் ஊக்கிவிப்பு கிடைப்பதை உறுதிப்படுத்தல், மாணவர்களின் அருகில் சென்று அவர்களின் செயற்பாடுகளை அவதானித்தல்.

தேவையான சந்தர்ப்பங்களின் ஆலோசனை வழங்குதல், தேவையேற்படின் நிபுணத்துவமுள்ள ஆலோசனை வழிகாட்டல் சேவையை பெற்றுக்கொடுக்க உதவுதல்.

பிள்ளைகள் ஆசிரியரை அவதானிக்கும் சந்தர்ப்பங்களில் மட்டும் அறிவுறுத்தல், ஆலோசனை, விளக்கங்களை வழங்குதல் மற்றும் சிறு சிறு விளக்கங்கள், அறிவுறுத்தல்களை வழங்குதல்.

### 3. வகுப்பறை ஒழுங்கமைப்பு

மாணவரின் கவனத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர் அவதானிக்கக் கூடிய வகையில் வகுப்பறை அமைந்திருத்தல்.

மாணவர்களின் ஆக்கங்களை, மாணவர்களுக்கு மகிழ்வூட்டும் நிகழ்வுகள் தொடர்பான படங்களை காட்சிப்படுத்தல்.

ஆசிரியர் இலகுவாக வகுப்பறையைச் சுற்றிவந்து அவதானிக்கக்கூடியதான ஒழுங்கமைப்பு

தொடர்ச்சியாக ஒருவகுப்பறையில் அமர்ந்திருப்பதை தவிர்த்தல், இதற்கென விசேட வகுப்பறைகள் (அமைதியான, மகிழ்வூட்டும், அழகான, குளிர்மையான வகுப்பறைகள், மைதானம், மரநிழல்கள்) விளையாட்டிடங்களைப் பயன்படுத்தலாம். ஆகக்குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது அவர்களின் வகுப்பறைக்கு வெளியே கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வது.

### 4. ஆசிரியரின் கற்பித்தல் முறைகள்.

பல்வேறு காரணிகள் கற்றலின் அளவைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனினும் ஆசிரியர் சார்பான விடயங்கள் முதன்மையானவையாகக் காணப்படுகின்றது. ஓர் ஆசிரியர் மாணவர்களை வழிப்படுத்துவதில் முதன்மையானவர். அதிலும் மெல்லக்கற்கும் மாணவர் விடயத்தில் சில விசேட ஆற்றல்களைக் கொண்டிருத்தல் அவசியமாகும். குறிப்பாக இம் மாணவர்களுக்கு மரபு ரீதியான முறைகளைத் தவிர்த்து மாணவரின் இயலுமைக்கேற்ப தமது செயற்பாடுகளை திட்டமிட்டு வழிப்படுத்துதல் அவசியமாகும்.

மாணவர்களுக்கு குறித்த பாடத்தில் தெரிந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி பாடத்தை வழிப்படுத்துதல், திட்டமிடுதல், கற்றல் அலகுகளை சிறு சிறு நோக்கங்களாகப் பிரித்து செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்,

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இயலுமானவரை எல்லா புலன்களும் செயற்படக்கூடியதான செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தல், ஒளி, ஒலி, எறிகருவிகளைப் பயன்படுத்துதல்.

கற்றல் அடைவை அளவிடுவதற்காக சிறிய சிறிய அளவீட்டுக்கருவிகளைப் பயன்படுத்துதல், தெளிவான சிறிய வாய்மொழி மூல வினாக்களை கேட்டல், பிள்ளைகளின் கற்றல் முறைகளை மதிப்பிட்டு அதற்கேற்ப (பார்த்து, கேட்டு, செய்துபார்த்து-VAK) மாணவர்களினால் இலகுவில் அடையக்கூடிய கற்றல் நோக்கங்களை நடத்தைசார் நோக்கங்களாக மாற்றுதல். இவை ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிஜவாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்துவதறகான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

*****

அடர்ந்த காடு. காட்டில் நடுவிலே ஒரு சிறிய குடிசை. அந்த குடிசையில்தான் கமலனும் அவனது பெற்றோர்களும் வசித்து வந்தனர். அவனுக்கு ஒரே ஒரு தங்கை. தாய் தோசை விற்று சீவியத்தை நடத்தினார். திடீரென நடந்த விபத்தில் குடிப்பழக்கதிற்கு ஆளான அவனின் தந்தையும் இறந்து விட்டார்.



# மண்பானையும் அவனும்

க.தாட்ஷாயனி – ஆங்கிலத் துறை

கமலனும் வறுமையின் பிடி பழகிய ஒன்று. ஆனால் அவனின் தங்கையோ சிறு பிள்ளை தரம் 1இல் கற்று வந்தாள். தான் படிக்காவிடினும் தங்கையை எப்பாடு பட்டாயினும் படிப்பித்து உயர்நிலைக்கு கொண்டு வர வேண்டும் என கமலன் நினைத்தான். தாயும் பாவம் தோசை சுட்டு அதை தலையில் சுமந்து வீடு வீடாக சென்று விற்று வந்தார். செய்வது அறியாமல் கமலனும் சுயத்தொழில் ஏதும் செய்தேனும் குடும்பத்தையும் தங்கையின் படிப்பையும் முன்னேற்ற நினைத்தான்.

அப்போது அவனுக்கு வயது வெறுமனே 11 தான். ஒரு குயவனின் வீட்டில் சென்று பானைகளை செய்வதற்கு பழகினான். கஷ்டத்தின் மத்தியிலும் வேதனையின் மத்தியிலும் அவன் முயற்சியை கைவிடாமல் பானைகள் செய்து அதன் மூலம் ஈட்டிய வருவாயை கொண்டு குடும்பத்தை கவனித்தான். காலங்கள் உருண்டு ஓடின.

இன்று 11வருடங்கள் ஆயிற்று. தங்கை க. பொ. த சாதாரண தரத்தில் 9A உடன் சித்தி பெற்று உயர் கல்விக்காக செல்கிறாள். தாய் வீட்டில் சிறிய சிற்றுண்டி உணவகத்தை நடத்தி வருகின்றாள். கமலன் ”விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி” என்பதை நிரூப்பிக்கவே பிறந்தவன் போல் சொந்தமாக மண் பானைகள் செய்யும் இடம் ஒன்றில் 3வேலையாட்களின் தலைவனாக முன்னேறி உள்ளான்.

வறுமையின் பிடியில் வாடிய அவன் தன் குடும்பத்தை வறுமையில் வாட விடவில்லை. பல கஷ்டங்கள், வலிகள், வேதனைகளின் சங்கமம் அவனது முயற்சிக்காலம். இருந்தா லும் விடாது உழைத்து தாய்க்கு சிற்றுண்டி சாலை அமைத்து கொடுத்து விட்டான் தங்கையும் நன்றாக படிப்பித்து உயர்கல்விக்காக தேசிய பாடசாலையில் சேர்த்து விட்டான்.

**வாழ்க்கை சுகமானது**
**முயற்சியுடன் நகரும் போது...!**

**அது ஒரு மாளிகை, அரக்கர்கள் வந்து போகும் மாளிகை என்று கூட சொல்லலாம். வந்தவர்களை இறக்கி விட்டு சகல பஸ்களும் வெளியேறி அவர்களால் கூறப்படும் இடங்களுக்குச் சென்றன. மங்களவும் சாலியவும் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று பஸ்ஸை நிறுத்தினார்.**

யன்ன. அபித ச்சந்த துன்னா தமாய் தெங் தேரணவா'' (இந்த அரசாங்கம் சரி வராது.. நாங்களும் ஓட்டுப் போட்டோம் தான் இப்போது விளங்குகிறது..) இதனை வெவ்வேறு வகையில் சொன்னார்கள். ''அபி தமாய் ஹொந்தட்ட கரே'' அனைவரும் பலமாக சிரித்தார்கள். ''படு மில பலாண்ட கோ…அபி வாகே மினிசு கோஹோமத ஜுவத் வன்னே..'' (விலைவாசியைப் பாருங்கள் எங்களைப் போன்றவர்கள் எப்படி ஜீவிப்பது..) ''லமயின்ட பாசல் யண்ட விதியக் நே… மொ வெய் த தன்னே நெ…''(பிள்ளைகள் பாடசாலை செல்ல

# ட்ரைவர் மங்களவின் நெறியும் கொழும்பு மாளிகையின் வெறியும்

- சிவ.இராஜேந்திரன் -



3

அங்கு வேறு பஸ்கள் நான்கும் நிறுத்தப்பட்டிருந்தன. ஐந்து ட்ரைவர்மாரும் கோலயாக்களும் தேநீர் குடிக்கச் சென்றனர். ஹோட்டல் சற்றுத் தூரத்தில் தான் இருந்தது ''மம உதே இந்தலா மொகுத் கேம நே… (காலையிலிருந்து சாப்பாடு சாப்பிடவில்லை) களைப்பில் இருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள். ''மங் கால்ல.. மே.. தென்னம ஹம்பாந் தோட்ட அரயா… களுத்தற…'' (நான் காலி… இவர்கள் ஹம்பாந்தோட்ட… அவர் களுத்தறை) மங்கள பற்றியும் கேட்டு அறிந்துக் கொண்டனர். நீண்ட கால நண்பார்களைப் போல சிரித்துக் கதைத்தனர். ''மே ஆண்டுவ நங் ஹரி வழியில்லை என்ன நடக்கப் போகுதோ தெரியவில்லை..) ''போலிமே இந்தலா மெறண்ட தமாய் தியனே..'' (வரிசையில் நின்று சாக வேண்டியது தான்) இன்றைய 'மீட்டிங்'பற்றி ஒரு வரும் நல்ல அபிப்பிராயம் கூறவில்லை. அது எதற்காக நடத்தப்படுகின்றது என்பது அவர்களுக்கு நன்றாக விளங்கி விட்டது. போன்கள் தான் சம்பவங்களை நேரடி ஒளி ஒலி பரப்பாகத் தருகின்றதே. ''மேக ஓன நெத்தி வெடக்…'' (இது தேவையற்ற விசயம்..) முடிவுக்கு வந்து விட்டார்கள். அரை மணித்தியாளம் கூட செல்லவில்லை. கோட்டை பகுதியிலும் கோல்பேஸ் பகுதியிலும் தாக்குதல் சம்பவங்கள் நடப்பதாக தகவல் பரவியது.

எங்கும் ஒரே பதட்டமாக இருந்தது. அரக்கர் மாளிகையிலிருந்து மது கலந்த மனிதர்கள் புறப்பட்டு விட்டனர் என்பதும், அவர்களால் தாக்கப்பட்ட வர்கள் பலர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள் ளமையும் தெரிய வந்தது. ட்ரைவர்கள் வாயில் வந்த படி ஏசத் தொடங்கி விட்டனர். பெற்ற பிள்ளைகள் ஒழுங் காக இல்லாத படியால் அவர்களைப் பெற்ற அம்மாமார்கள் தான் தூசண ஏச்சுகளுக்கு ஆளாகினர். சாலியவுக்கு பல முறை போன் செய்தும் பதில் இல்லை. சகல ட்ரைவர்களும் பஸ்களை வேறு இடத்துக்கு கொண்டு செல்வது பற்றி பேசினர். எனினும் எங்கும் போக வேண்டாம் அங்கு நிற்பது தான் பாதுகாப்பானது என்று ஹயர் பண்ணிய 'பெரியவர்கள்' சொல்லி விட்டனர். "மே... மோடயோ டக்காலா ஆவா நங் தெங்ம யண்ட புளுவாங்..." (இந்த புத்திக் கெட்டவர்கள் டக்கென வந்து விட்டால் உடனே போய் விடலாம்) காலி ட்ரைவர் ஜகத் கோபமாக சொன்னான். "ஏக நே...தெங் மொக்கத கரண்ணே கீலா மட்டனங் தேரின்ன நே....." (அது தானே இப்ப என்ன செய்வது... எனக்கு என்றால் விளங்க வில்லை..) பதட்டம் அதிகரித்தது. என்ன செய்வது? மங்கள ஓடிச் சென்று தனது பஸ்ஸை ஸ்டார்ட் செய்தார். அதனை உடனடியாக வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். அவரது 'சீதேவியே' அந்த பஸ் தான். நூறு நூற்றியம்பது பேர் பஸ்ஸை நோக்கி வருவது தெரிந்தது. அவர்கள் மிகுந்த கோபத்துடன் இருந்தனர்.பஸ்ஸில் ஏறியவர்கள் மங்களவை பிடித்து இழுத்து வெளியே தள்ளினர்.

"சண்டியகம.. பென்னாண்ட பல்லோ டிக்க கெனா வாத?" (சண்டித்தனம்... காட்ட நாய்களைக் கொண்டு வந்தீர்களா?) கோபங்கள் தூசண வடிவிலும் வெளிவந்தது. "அபி வரதக் கரலா நே... புத்தே... சமாவெண்ட.. (நாங்கள் தவறு செய்யவில்லை மகன்மார்களே.... மன்னித்து விடுங்கள்) "ஏக் கொல்லோன்ட மொகுத் கராண்ட எப்பா... (அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம்..) பலர் சத்தமிடுவது கேட்டது. இனனும் பல பேர் கூடி விட்டனர் பஸ்ஸிலிருந்து இரு நூறு மீற்றர் தூரத்துக்கு அவர்களை தள்ளிக் கொண்டு போய் விட்டனர். "அபிட்ட கெவ்வோத்.... அபித கஹா னவா..." (எங்களுக்கு அடித்தால் நாங்களும் அடிப்போம்.) எங்கும் ஒரே சத்தமாக இருந்தது. ஐந்து நிமிட நேரத்துக்குள் பஸ்கள் நிறுத்தப்பட்டப் பகுதியிலிருந்து கரும்புகை வெளி வரத் தொடங்கியது. கண்ணாடிகள் நொறுங்கும் சத்தங்களும் கேட்டன. ட்ரைவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மங்கள கூட்டத்தினுள் புகுந்து செல்வதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் சரி வரவில்லை. நெஞ்சம் படபடத்தது. நெஞ்சு வலிப்பதை உணர்ந்தார். முகம் வியர்வையால் நனைந்தது. தலைச்சுற்று மயக்கம். ஒன்றும் செய்ய முடியவில்லை. "பஸ்வலட்ட மொகுத் கராண்ட எப்பா... ஒன நங் அபிவ மரலா தாண்ட..." பஸ்களுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம் வேண்டுமென்றால் எங்களைக் கொல்லுங்கள்) சத்தம் வெளியே வரவே இல்லை. கீழே விழுந்து விட்டார். சுமார் நான்கு மணியளவில் கண் விழித்துப் பார்த்தார். மற்றைய ட்ரைவர்களும் அங்கு தான் இருந்தனர். அவர்களின் கண்களில் கண்ணீர்... தங்களுக்கு சோறு போடும் பஸ்கள் எரிவதைக் கண்களால் பார்க்க முடியுமா? அது ஒரு சன சமூக நிலையம். கொழும்பில் வாழும் சகல இனப்பிரிவினரும் தங்களைச் சுற்றி இருப்பதை அவரால் உணரந்துக் கொள்ள முடிந்தது. "பஸ் வலட்ட மொக்கத உனே..." (பஸ்களுக்கு என்ன நடந்தது..) உடல் மட்டுமல்ல அவரது குரலும் நடுங்கியது. பேசாமல் இருக்குமாறு பலர் சைகை காட்டினர்.

அவரால் இருப்புக் கொள்ளவில்லை. தனது உயிராக இருக்கும் பஸ்ஸை ஒரு முறை பார்த்துவிட வேண்டும். அவரை யாரும் தடுக்க வில்லை. அருகில் சென்று பஸ்களைப் பார்த்தார். அவை ஒரு பக்கமாகப் புரட்டப்பட்டு எரியூட்டப்பட்டிருந்தன. புகையும் நெருப்பும் தொடர்ந்து மேலெழுந்தவாறே இருந்தது. தனது பஸ் அடித்து நொறுக்கப்பட்ட நிலையில் ஓரமாகக் கிடந்தது. “ஐயோ… தெய்யனே…” (ஐயோ கடவுளே..) கண்ணீர் விட்டு அழுதார். “பிஸ்ஸன்ட ரட்ட பார துன்னோத் மேக தமாய்… அபே ஜீவதய… (பைத்தியக்காரர்களிடம் நாட்டைக் கொடுத்தால் இது தான் நமது வாழ்க்கை…) பின்னாலிருந்த பெரியவர் ஒருவர் சொன்ன விடயம், மங்களவுக்கு நன்றாகக் கேட்டது. அவரால் ஒன்றுமே பேச முடியவில்லை. அவரது கவனம் எல்லாம் பஸ்ஸின் மீது தான் இருந்தது.

தனது கண்களைப் போல பாதுகாத்த பஸ் இப்படி கிடப்பதற்குரிய காரணம்… “மாமே துக்வெண்ட எப்பா… வதக் கரப்பு ஆயட்ட தண்டுவம லெபெ னவா…” (கவலைப்பட வேண்டாம் மாமா தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கிடைக் கும்) இளைஞன் ஒருவன் ஆறுதல் சொன்னான். தனது அப்பாவும் ஒரு ட்ரைவர் தான் பிழையான காரியங்களுக்கு ஆட்களை அழைத்துச் செல்வதை அவர் ஏற்றுக் கொள்ளவே மாட்டார் என்பதை தெளிவுபடுத்திச் சொன்னான். பிழை செய்வதற்காக வந்தவர்களில் பலர் ‘பேரை’ ஆற்றின் சாக்கடை நீரால் கழுவப்படுவதாக தகவல் சொன்னவனும் அவன் தான். மாமாவும் பிழை தான் செய்துள்ளீர்கள் என்பதை நேரிடையாகவே சொல்லி விட் டான். மங்களவுக்கு அவன் சொன்ன விடயங்கள் ஆரம் பத்தில் பிழையானது போல தெரிந்தாலும், நடந்த சம்பவ ங்களைப் பற்றி ஆழ சிந்திக்கும் போது எதிர் வினைகள் சரியானதாகவே தோன்றியது.

- முற்றும் -



# தனது மகனின் ஆசிரியருக்கு

## லிங்கன் எழுதிய புகழ் பெற்ற கடிதம்

அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்ல, அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல என்பதை எனது மகன் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும், மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில் உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள் என்பதையும், சுயநல அரசியல் வாதிகளுக்கு இடையில் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதையும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமைக் குணம் வந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.

மௌனமாக ரசித்துச் சிரிப்பதன் ரகசியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக் கொள்வது கோழைத்தனம் என்பதைப் புரியவையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதே வேளையில் இயற்கையின் அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும் பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் ரசிப்பதற்கும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

ஏமாற்றுவதைவிடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதைப் பள்ளியில் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுய சிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டு குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

கும்பலோடு கும்பலாய்க் கரைந்துபோய்விடாமல் எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயல்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். கண்ணீர்விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால், எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

தனது செயல்திறனுக்கும், அறிவாற்றலுக்கும் மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும். ஆனால், தனது இதயத்திற்கும், தனது ஆன்மாவிற்கும் விலை பேசுபவர்களை அவன் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்ட தொடர்ந்து போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை கொடுங்கள்.

அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக செல்லம் காட்டி சார்ந்திருக்கவைக்க வேண்டாம். ஏனென்றால் கடுமையான தீயில் காட்டப்படும் இரும்பு மட்டும்தான் பயன்மிக்கதாக மாறுகிறது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அதே வேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் மகத்தான நம்பிக்கைகொள்வான்.

இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான், இதில் உங்களுக்குச் சாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் மிக நல்லவன், எனது அன்பு மகன்.

நன்றி இணையம்



# இலங்கையின் கல்வி அன்றும் இன்றும்

– பத்மநாதன் நிதுஷா, ஆரம்பப்பிரிவு –

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு எழுமையும் ஏமாப்பும் உடைத்து"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய ஒரு பிறவியில் ஒருவன் பெற்ற கல்வியறிவு அப்பிறவியில் மட்டுமில்லாது அவன் எடுக்கும் ஏழ் பிறவியிலும் தொடர்ந்து சென்று அவனுக்கு பாதுகாவலனாக அமையும் தன்மை உடையது என்றும் இந்த உலகத்தில் நம்முடைய பங்கு என்னவென்று தெரிந்து கொண்டு சமுதாயத்தில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கி தருவது கல்வி தான். ஐந்தறிவு ஜீவனில் இருந்து நம்மை இன்று வரை உன்னத நிலையில் உயர்த்தி வைத்திருக்கின்றது என்றால் அதற்கு அடிப்படை காரணம் கல்வி தான். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் மிக முக்கியமான ஒன்றாக கல்வி தான் விளங்குகின்றது.

கல்வியானது 1945 ஆம் ஆண்டு ஜீலை மாதம் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு 1945 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சகல மாணவர்களுக்குமான இலவசக் கல்வி C.W.W. கன்னங்கரா அவர்களால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து இலவசமாக கல்வியினை வழங்க முடிவெடுத்த இலங்கை அரசு அதனை நடைமுறைப் படுத்தலானது. நல்ல அறிஞர்கள் பலர் தோன்றி நாட்டின் அபிவிருத்திக்காகவும் வளர்ச்சிக்காகவும் உழைத்தமையும் உன்னதமானதே. எனவே ஆரம்ப காலத்தில் இலங்கையின் கல்விமுறை என்னவோ சாலவும் பொருந்தும் வண்ணமே அமையப்பெற்றது என்றால் ஐயமில்லை. அன்று இருந்த கல்விமுறை இன்று மாறுபட்டது என்று நோக்கினால் பல்வேறு காரணங்களை கூறமுடியும்.

**"படிக்கும் காலம் பொற்காலம் என்பர்"** இக்காலத்தை இழந்து விடும் மாணவர்கள் கல்விக் கண்ணை இழந்து விடுகின்றனர் என்றே கூறமுடியும். கல்வியின் மூலமே ஒரு சமுதாயத்தின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் விழுமியங்கள் அழியாது பாதுகாக்கப் படும் என்றால் அந்த கல்வியறிவு இல்லை என்றால் என்னவாகும். கல்வி இருந்தால் ஒரு சமூகம் சமத்துவமாக சகலருடனும் ஒன்றாக வாழ வழிசமைக்கும். அந்த வகையில் நாம் அன்றிருந்த கல்வியை நோக்குவோமானால் மாணவர்கள் விரும்பி படித்தார்கள். இலை தழைகளை அணிந்து இருக்கும் போது கூட கல்வி கற்பதையே விரும்பினார்கள். ஆனால் இப்போது மாணவர்கள் பள்ளியை பார்த்து பயப்படுகின்றனர். அன்று சமூகத்தில் வசதி வாய்ப்புக்கள் இல்லை ஆனால் கல்வியறிவு மேலோங்

மேலோங்கி காணப்பட்டது. அதனால் தான் படித்தவர்கள் மருத்துவர்கள் போன்ற வல்லுனர்கள் பல துறைகளில் உருவாகினர். இன்று பல வசதிகள் காணப்பட்டும் கல்வி சமுதாயத்தில் மாற்றங்களுடனே பேணப்பட்டு வருகின்றது. ஆனால் மாறிவருகின்ற உலகில் எதுவும் மாறலாம். நிரந்தரமான ஒன்று கல்விதான். இன்று இலங்கை கல்வி முறையில் சில மாற்றங்கள் நிகழலாயிற்று என்றாலும் நாம் கல்வியை மேற்கொள்வதே சிறந்ததொன்றாகும்.

அன்று இருந்த சிறப்பான கல்வி முறை இன்று எங்கும் இல்லை. காலம் என்னும் ஓடம் தன்னில் கதிகலங்கிய நிலையில் கண்ணீரை சுமந்தவாறு கரையை நோக்கி சுழல்கிறது. இன்றைய இலங்கை கல்வி எனும் இலக்கு. அன்று ஆரம்ப இலங்கையின் கல்வி **பசுமரத்தாணி போல.....** பதிய வைக்கும் பல கல்விமுறைகள் ஆலமர விருட்சமாய் விழுது பரப்பி துளிர்த்து நின்றன. ஆலயங்கள் விகாரைகள் பள்ளிவாசல்கள் தேவாலயங்கள் என பல சமயதலங்கள் மாணவர்களை நல்வழிப்படுத்தும். பிரிவெனாக்களாகவும் குருகுலங்களாகவும் மிளிர்ந்து மாணவச்செல்வங்களின் ஒழுக்கநெறி கல்வியோடு உலகையே ஆட்டிப்படைத்த தொற்று நோயான கொரோனா இலங்கையையும் பற்றிக் கொண்டது. இதனால் மாணவர்களது கல்விமுறை பெரிதும் சீர்குலையத் தொடங்கியது. மாணவர்கள் அருகில் இருந்து ஆசிரியருடன் நேரடியான உறவை மேற்கொண்டு கல்வி பயிலும் முறை தடை செய்யப்பட்டது. ஆதனால் தொழில் நுட்ப வளர்ச்சி பெரிதும் உதவியது. ஆனாலும் மாணவர்கள் தொலைபேசி மற்றும் கணணி போன்ற இலத்திரணியல் சாதனங்களுடன் அறைக்குள் மூழ்கிக்கிடந்தனர். இலத்திரணியல் சாதனங்களை பயன்படுத்தி முழுமையான கல்வியை மாணவர்களால் பெறமுடியவில்லை. கொரோனா எனும் கொள்ளை நோய் காரணமாகவே zoom செயலியானது ஆரம்பமாகியது. இதனால் சாதகமான விளைவுகள் இருந்தாலும் அதிகமாக பாதக விளைவுகளே காணப்பட்டது. மாணவர்கள் சிறு வயதிலேயே தொலைபேசியை பாவிக்க ஆரம்பித்தனர். கற்றலுடன் வேறு சில விடயங்களையும் மாணவர்கள் தொலைபேசியில் செயற்படுத்த தொடங்கினர். கல்வியானது சீர்குலைந்த வண்ணமே இருந்தது. தொடர்ந்து பாடசாலைகள் நடைபெறாமையால் மாணவர்கள் கற்றலில் ஆர்வம் காட்ட விரும்பவில்லை. அவர்கள் பாடசாலை நடைபெற்றாலும் விடுமுறையை எண்ணியே கல்வி கற்கின்றனர். ஏன் என்றால் அதிகவேளை வீட்டிலே இருந்த மாணவர்கள் கற்றல் சூழலை விரும்பவில்லை என்பதே உண்மை.

அன்றைய காலத்தில் இருந்த கல்வி நாம் படிக்கும் இலக்கியங்களில் இருந்தே தெரிந்து கொள்ள முடியும். அன்று மாணவர்கள் போர்க்கலை வித்தைகள் இதிகாசங்கள் இலக்கியங்கள் நாடகங்கள் கூத்துக்கள் போன்றவற்றில் சிறந்து விளங்கினர். இன்று மாணவர்கள் கற்றலை மட்டுமே மேற்கொள்கின்றனர். ஏனென்றால் இன்றைய கல்வி முறையில் மாணவர்கள் பெற்றோரின் கட்டாயத்திலும் சமுதாயத்தின் கட்டாயத்திலும் படித்து வருகின்றனர். ஒரு சில மாணவர்கள் மதிப்பெண்களுக்காக மட்டும் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். நாம் ஏன் படிக்கின்றோம் எதற்காக படிக்கின்றோம் என்று புரியாமல் படித்து வருகின்றனர். இன்றைய நிலையில் இலங்கை கல்வி முறையில் சிறிதளவு

கல்வியைத்தான் அளிக்க முடிகிறது. இணைபாடவிதான செயற்பாடுகளோ வேறு இசைத்துறைகளில் பங்கு பற்றலிலோ இந்த கல்விமுறை கொண்டிருக்கவில்லை. காரணம் நாட்டின் சீர்குலைந்த நிலையே ஆகும். ஐரோப்பிய நாடுகளில் மாணவர்களின் எண்ணங்கள் சிந்தனை விருத்திற் கேற்றாற்போல் கல்வி முறை அமைக்கப்பட்டு பிள்ளையின் நாட்டம் எத்துறைகளில் ஈர்க்கப்படுகிறதோ அத்துறையில் பிள்ளையை பண்டிதனாக்கி மகிழ்கின்றது அந்த நாடு. ஆனால் இலங்கை கல்வி முறையானது ஒரு சில கல்வியின் இலக்குகளை மையமாகக்கொண்டு நகர்வதால் தொழிற் கல்வியினை பெற்றுக்கொள்ளாதுஎ பொருத்தமற்ற துறையில் கற்று வேலையில்லாபட்டதாரியாக உருவெடுத்து அபிவிருத் திக்காக உழைக்க வேண்டிய மாணவர்கள் இன்று ஆர்ப்பாட் டங்களில் ஈடுபட்டு வீதியில் நிற்கும் துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

தற்போது எமது சமகால இலங்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது? இதற்கான காரணங்கள் என்ன? இலங் கையில் அரசியல் ஏற்படுத்திய மாபெரும் மாற்றம் எமது மாணவ சமுதாயத்தின் கல்வியையே பாதித்துள்ளது. பாட-சாலை விடுமுறைகள் மாணவர்களை ஒரு வருடத்திற்கே பின் கொண்டு வந்த கொரோனா தற்போது அரசியல் தடம் புரள்கள் அடிக்கடி ஏற்படுவதனால் கல்விக்காக கொண்டு வரப்படும் திட்டங்களும் நீரின் மேலிடப்பட்ட பொறிப்பு போல வே நிச்சயமற்றதாகி விடுகின்றதாலே மீண்டும் மாணவர்களது கல்வி ஆண்டு பின் கொண்டு செல்லப்படுகின்றது. இறந்த கால நினைவுகளுடன் நிகழ்காலத்தை வளப்படுத்தியவாறு எதிர்காலத்திற்காக ஏங்குகின்ற மாணவர்களின் வாழ்க்கை வரண்ட பாலைவனமாகிக் கொண்டிருப்பதை அறிந்தும் அறியாது இருக்கின்றது எமது தற்போதைய இலங்கை அரசு. எல்லா நாடுகளுக்கும் முன் உதாரணமாக இருந்த கல்வி முறை பின்லாந்திலே காணப்படுகிறது. பின்லாந்துக் கல்வி முறை தான் இலங்கைக்கு அவசியம் என்றில்லை. இலங்கையின் கல்வி இலக்குகள் நகருமானால் இன்னல கன்று இன்பம் பிறக்குமல்லவா? **“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடு அல்ல மற்றயவை.”** என்ற குரலிற்கமைய ஒருவனுக்கு அழியாத சிறப்பு மிக்க செல்வம் கல்வியேயாகும். என்பதை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இவை நடந்தேறினால் வளமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க முடியும். சுபீட்சம் நிறைந்த இலங்கைக் கல்வி முறையை மீண்டும் கொண்டுவர முடியும். சிறப்பான ஆட்சிமுறை உருவாகினால் மட்டுமே கல்வி மீண்டும் உயிர் பெறும். கல்வி வேலை பார்த்து சம்பாதிப்பதற்கு மட்டுமல்ல வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் என்று புரிந்து கொள்ள வேண்டும். இந்த மனிதம் எந்த துயரம் வந்தாலும் கல்வி எனும் செல்வத்தை அன்று போல் இன்றும் போற்றி வாழ வேண்டும். **சவால்களை சந்தர்ப்பங்களாக்கி** அன்றிருந்த கல்வி முறைகளைக் கொண்டு வர வேண்டும். சமூகத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து நல்ல அரசியலை உருவாக்க வேண்டும். ஒவ்வொருவரும் **சமூகத்தின் மாற்றம் என்னிலிருந்தே** ஆரம்பிக்க வேண்டும் என்பதை மறக்கக் கூடாது. அப்போது இலங்கையின் கல்வியை மீண்டும் கொண்டுவர முடியும். நிச்சயமாக அன்றும் இன்றும் என்றும் கல்வி என்பது ஒன்றே என கொள்வோம்.

**“சமாதானம் நிறைந்த மானிடம் உண்டென்றால் கல்வி அன்றும் இன்றும் என்றும் ஒன்று தான்”**

*****

# இறந்த தந்தை குரல் கனவில்...

என் உயிரணுவில் முளைத்த
பூ மகளானவளே! என்
மனையாள் சொந்தம் தந்த
தொட்டில் பந்தம் நீ

ஒரு பொழுதும் உன் கண்ணீரை
விரும்பாத நான்
அன்று நீ கண்ணீர் கடலைச்
சொரிந்து கதறியும்
கண்டுகொள்ளாமல் என்
படுக்கையில் இருந்து விட்டேன்
அம்மா

காளனவன் கைது செய்ததால்
கவலையோடு சென்றுவிட்டேன் நீ
உடைந்து போய் நிற்கையில் உன்
அருகில் யாருமில்லை ஆறுதல்
சொல்ல,ஏன் நான் கூட இல்லையே
அம்மா

நான் உயிர்மூச்சாய் நேசித்த
இதயமடி நீ ஏன் தவிக்கின்றாய் நீ
பிறந்தவுடன் இராஜகுமாரனாக
இருந்திருக்கலாமே என சற்று
முகம் சலித்ததுண்டு தாயே

ஆனால் இன்று உணருகிறேன்
தேவி உரு கொண்ட ஈசனடி நீ
எதையும் தாங்கும் கணத்த மனம்
கொண்டவளே இந்த அப்பாவின்
பிரிவையும் தாங்கிக் கொள்ளம்மா

ஆம் நான் சற்று ஓய்வெடுத்துக்
கொண்டு மீண்டும் வருகின்றேன்
உன்னை காண்பதற்காக கனவில்
அல்ல உன் வயிற்றில்
பிள்ளையாக......

**- ரா.சர்மிளா, இசைத்துறை -**

## பவளப் பனுவல்கள்

**பக்கமொன்றை நீ புரட்ட**
**உன் துக்கமெல்லாம் அது விரட்டும்!**
**தட்டித் தடக்கிய உன் நாவும்**
**எட்டுத் திக்கும் பேச்சுக் கணை தொடுக்கும்!**

**பொருளாய்ப் பெற்ற செல்வம்**
**இருளாய்க் கெட்டும் போகும்**
**பொருள் செறிந்த நூலாற் பெற்ற செல்வம்**
**வானாள் முழுதும் தொடரும்...!**

**வாசிப்பு வெறும் படிப்பு அல்ல**
**நம்மை இயக்கும் இதயத் துடிப்பு!**
**விருப்புடன் பனுவல் தொட்டால்**
**சுறுக்குடன் மனிதம் மாண்பெய்துமே!**

**– லட்சிகா மோகன், கணிதப்பிரிவு –**

# "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 11

## கதைகளால் நியமாகி...

**எல்லோருடைய வாழ்க்கையும் ஏதோ ஒரு பாடத்தை கற்றுத் தரும்.**




சகோதரர்கள் இரண்டு பேர் இருந்தார்கள். அதில் ஒருவன் குடிகாரன், ஒன்றுக்கும் உதவாதவன், வாழ்கையில் எந்தக்காரியத்தையும் அவன் உருப்படியாக செய்ததில்லை.

ஆனால் இன்னொரு சகோதரனோ இதற்கு எதிர்மாறானவன் நன்றாகப்படித்து நல்ல வேலையில் சேர்ந்து உயர்ந்து நிற்பவன்.

ஒரே பெற்றோருக்கு பிறந்த இந்த சகோதரர் இருவருமே வெவ்வேறு விதமாக இருப்பதில் பலருக்கும் ஆச்சரியம் இந்த ஆச்சரியத்தை ஒருவர் சகோதரரிடமே கேட்டுவிட்டார்.

என் வாழ்க்கை இப்படி கேடு கெட்டுப்போவதற்கு அப்பாதான் காரணம் என்று சொன்னான் குடிகார சகோதரன். "என் அப்பா எப்போதும் குடித்துக்கொண்டே இருப்பார், ஒருவேலையும் செய்யமாட்டார் அவருக்கு பிறந்த நான் மட்டும் எப்படி நல்லவனாக இருப்பேன்?" என்று கேட்டான் அவன்.

அடுத்த மகனும் தன் வெற்றிக்கு அப்பாவே காரணம் என்றான். என் அப்பா மிக மோசமானவர் அவரைப் போல இருக்க்கூடாது வாழ்கையில் நல்ல மனிதனாக வாழ்கையில் வெற்றிகரமான மனிதனாக வரவேண்டும் என்று சின்னவயதிலேயே வைராக்கியம் கொண்டேன்.

"அவரிடமிருந்து படித்த பாடம்தான் என்னை இந்த அளவிற்கு உயர்த்தியிருக்கிறது" என்றான் இவன்.

**நீதி: வாழ்க்கை தரும் பாடங்களிலிருந்து நல்லவற்றை எடுதுக் கொள்வது நம்மிடம் தான் இருக்கிறது.**

# மனிதனை உருவாக்கும் கல்வி

– க.பேர்ணாட் –




அறிவுக்காக பரீட்சைப் பெறுபேறுகளுக்காக வழங்கப்படுவது மட்டுமல்ல கல்வி என்பது கல்வியியலாளர்களின் கருத்தும் வலியுறுத்தல்களும் ஆகும். கல்வி சமூகத்துக்கு பொருத்தமான மனித நடத்தைகளையும் கூடவே உருவாக்க வேண்டும் என்பதும் கல்வியியலாளர்களது கருத்துமாகும். அறிவைப் பெற்று முதல்நிலை பெறுபேறுகளை அல்லது தகுதிக்கான பெறுபேறுகளைப் பெறுவதுடன் நின்றுவிடாது அவற்றை பயன்படுத்தக் கூடிய மனிதர்கள் உருவாக வேண்டும். கல்வி மனித விழுமியங்களை மென்திறன்களை பொருத்தமான மனித நடத்தைகளை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என சமூகம் எதிர்பார்க்கின்றது.

மனித விழுமியங்களை மனித நடத்தைகளை கற்கவோ கற்பிக்கவோ முடியாது. ஆனால் அவற்றுக்கு பயிற்சியளிக்க முடியும். கல்வி நிறுவனங்கள் இவ்வாறான பயிற்சியளிப்பதில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். கல்வி நிறுவனங்கள் என்பது பொதுக்கல்வி முறையிலுள்ள பாடசாலைகள் மட்டுமல்ல கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் தனியார் கல்வி நிறுவனங்கள், தொழிற் கல்வி, தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், விழுமியங்களிலும் பொருத்தமான மனித நடத்தை உருவாக்கத்திற்கு பயிற்சி அளிப்பதிலும் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும். இதனூடாகவே சமூகத்தைப் பொறுப்பேற்கக்கூடிய மனித வளங்கள் சமூகப் பொறுப்புள்ள நற் பிரசைகள் உருவாக்க முடியும் என்பது எதிர்பார்ப்பாகும்.


தொழில் வாண்மையாளர்களை மட்டும் உருவாக்குவதல்ல கல்வி. வினைத்திறன் மிக்க மனித வளங்களை கல்வி தேவைக்கேற்ப உருவாக்கவேண்டும். சமூகத்தில் உற்பத்தி துறையில், கைத்தொழில் துறையில், விவசாயத் துறையில் இன்னும் பல்வேறு துறைகளில் வெவ்வேறு வகையான மனித வளங்கள் தேவைப்படுகின்றன. அத் தேவைகளை இனங்கண்டு கல்வி மூலம் அத்தகைய வினைத்திறனுடைய மனித வளங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதனால் சமூகச் சீரழிவுகளை சமூகத்தில் காணப்படும் வேலையின்மை தீர்ப்பதற்கோ இழிவளவாக்குவதற்கோ முடியும்.

மனிதன் (மாணவர்கள்) பல்வேறு உள்ளார்ந்த ஆற்றல்களைக் கொண்டிருக்கின்றான். அவ்வாற்றல்களை தனிமனிதன் தான் உணர்ந்துகொண்டு, அதனை விருத்தி

செய்வதற்கு வளர்த்துக் கொள்வதற்கு கல்வி உதவ வேண்டும். பரீட்சை நோக்காக அல்லது சான்றிதழ் வழங்கும், தரமிடுகின்ற கல்வியால் இவற்றைச் செய்ய முடியாது. குறிப்பாக பாடசாலைகள் புத்தகக் கல்வியை பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் கல்வியை சான்றழிக்கும் கல்வியை வழங்குவது மட்டுமல்லாமல் மாணவர்களை இனம் கண்டு அவர்களது ஆற்றல்களை, திறன்களை இனங்கண்டு மாணவர்கள் தமக்கிருக்கும் ஆற்றல்கள், திறன்களுக்கேற்ப பாடத்தெரிவுகளை, உயர்கல்வித்துறைகளை, தொழில்த் தெரிவுகளை மேற்கொள்ள உதவ வேண்டும். எல்லா மாணவர்களையும் உயர் கல்விக்கு வழிப்படுத்தி அனுப்ப முடியுமாயின் மகிழ்ச்சியே. அவ்வாறு முடியாவிட்டால் பொதுக்கல்வியில் இருந்து வெளியேறுவோர் தமக்குரிய தொழில்த் தெரிவுகளை இனங்கானக்கூடியவர்களாக தொழிலில் அடிப்படைத் திறன்களைப் பெற்றுக் கொண்டவர்களாக வெளியேறச் செய்வதில் கவனம் எடுக்கப்பட வேண்டும். இன்நிலையின் கவனம் பொதுக் கல்வியிலிருந்து இடையில் வெளியேறுவோரால் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்கவோ, இழிவளவாக்கவோ முடியும். இதில் ஆசிரியர்களின் செயற்பாடு முக்கியமானதாகும்.

ஆசிரியர்கள் வேலைவாய்ப்புப் பெற, சான்றிதழ் பெற, சமூக அந்தஸ்துப் பெற மட்டும் உருவாக்கப்படக் கூடாது. ஆசிரியர்களும் பல்வேறுபட்ட தொழில் அறிவை, திறன்களைப் பெறுவதற்கும் ஆசிரியர் கல்விக் கலைத்திட்டத்திற்கு புறம்பாக கிடைக்கும் சந்தர்ப்பங்களுக்கேற்ப தொழிற்கல்விப் பயிற்சி வழங்குவதற்கும் ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் சுயமாக முயற்சி செய்யவேண்டும். (இவ்விடயம் விரிவாகக் கூறப்பட வேண்டியது)

இறுதியாக எல்லா கல்வி முறைகளிலும் மனிதனை பொருத்தமான வினைத்திறனுள்ள மனித வளங்களை உருவாக்கும் முயற்சியில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.




*****




ஒரு மரம். வெகுகாலத்து மரம். அது அழகா யிருக்கிறதா இல்லையா என்று யாருமே கேள்வி கேக்கவில்லை.

மனிதன் தலைக்கு மேலே வானத்தையும் மேகத்தையும் பார்ப்பதுபோல் அவர்கள் தங்கள் கண்ணெதிரில் அந்த மரம் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்கள் - மாலை நேரத்தில், நண்பகலில், காலையில் பார்த்தார்கள், வெறுங் கண்களால் பார்த்தார்கள். இதயத்தால், உணர்வு பூர்வமாகப் பார்க்கவில்லை, புரிந்து கொள்ளவில்லை. அப்படிப் புரிந்து கொள்ள வேண்டும் என்று யாருக்கும் ஒரு நாளும் தோன்றவுமில்லை.

நாட்கள் கழிந்தன, பருவங்கள் கடந்தன, ஆண்டுகள் சென்றன. மரம் தன் இடத்தில் நின்று கொண்டிருந்தது.

மழைக்காலத்தில் அந்த மரத்தின் இலைகள் பெரிதாக, தளதளவென்று ஆகும் சரத் காலத்தில் அவை தடிமனாகும்,அவற்றின் பச்சை நிறம் இன்னும் அழுத்தம் பெற்று ஏறக்குறையக் கறுப்பாகிவிடும் பின்பனிக் காலத்தின் நடுப்பகுதியில் இந்தப் பசுமை - கருமை மங்கிப் போய்விடும். பிறகு குளிர்காலத்தில் அந்த இலைகள் சோகை பிடித்த கர்ப்பிணியின் வெளிறிய முகம் போல் பழுத்துப்போய் உதிர்ந்துவிடும். மரத்துக்கு எரிச்சலாயிருக்கும்.

அப்போதும் மரம் மரந்தான். ஆனால் அது பார்ப்பதற்கு வெறும் கட்டை போலிருக்கும் - சிறிய கட்டை, பெரிய கட்டை, மெல்லிய கட்டை, மனித விரல்போல் சின்னஞ் சிறிய, எண்ணற்ற கள்ளிகள், கட்டைகளாலான ஒரு சிக்கலான கட்டுமானம்..

ஆனால் அதற்காக யாரும் அதன்மேல் கோபித்துக் கொள்வார்களா? இல்லை. காரணம், அந்த மரம் மேகங்கள்கவிந்த ஆகாயத்துக்குக் கீழே தானே ஒரு காடு போல் அடர்த்தியாக நின்றிருக்கும்போது மனிதர்கள் அதை எப்படிப் பார்த்தார்களோ, அதே மாதிரிதான் அது குளிர்கால வானத்துக்குக் கீழே கட்டைகளையும் சுள்ளிகளையும் சுமந்துகொண்டு நிற்கும் போதும் பார்த்தார்கள். அதனால்தான் இது மேலெழுந்தவாரியான பார்வை, மனதால் புரிந்து கொள்வது அல்ல என்று சொன்னேன். ஜனங்கள்

அதைப் புரிந்துகொண்டிருந்தால் மாசி மாதத்தில்அதன் சிவப்பும் இளம் பச்சையும் கலந்த கொழுந்துகளின் செழுமையைப் பார்த்து ஆடிக் குதித்திருப்பார்கள். சித்திரை பிறந்ததும் அது கொத்துக் கொத்தாய்ப் பூக்களைச் சுமந்து கொண்டு ரோஜா நிற ஒளியை வானமெங்கும் பரப்பும்போது அவர்கள் மகிழ்ச்சி மேலிடக் கத்துவார்கள்.

அவ்வாறு யாரும் செய்வதில்லை, இதுவரை செய்ததில்லை. இரண்டு மூன்று வீடுகளுக்கு முன்னால் உள்ள நிலத்தில் ஒரு மரம் கப்புங் கிளையுமாக நின்று கொண்டிருப்பதால் ஒரு வசதி ஏற்பட்டிருக்கிறது என்று மட்டும் அவர்களுக்குத் தெரியும். அந்த வீடுகளில் இருப்பவர்களும் அவ்வப்போது இந்த வசதியை அனுபவிக்க வருவார்கள். காலை வேளைகளில் வயது முதிர்ந்தசிலர் செய்திப் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டுவந்து மரத் தடியில் அமர்ந்து அரசியல், சமூகம், பொருளாதாரம் பற்றி விவாதிப்பார்கள். பிற்பகலில் அந்தப் பக்கத்துக் கிழவிகளும் நடுத்தர வயதுப் பெண்களும் மரத்துக் கீழே மெல்லிய பச்சைக் கம்பளமாய் விரிந்திருக்கும் புல்லின்மேல் கால்களைப் பரப்பிக் கொண்டு சமையல், தையல், யார் வீட்டிலோ குழந்தை பிறந்தது, யாருக்கோ குழந்தை பிறக்காதது இவற்றைப் பற்றியெல்லாம் பேசிப் பொழுதைக் கழிப்பார்கள். மாலை நேரம் வந்ததும் சிறுவர் சிறுமியர் அங்கே விளையாட ஓடி வருவார்கள். மரத்தைச்சுற்றி ஓட்டம், மரத்தின் மேலேறி இலை பறிப்பது, கிளைகளை ஒடிப்பது, சில நாட்கள் மரக்கிளையில் கயிற்றைக் கட்டி ஊஞ்சலாடுவது.. இவ்வாறு ஒரே கூச்சலும் கும்மாளமுமா யிருக்கும்.

சிலர் குளிர்காலப் பகல் நேரத்தித கொண்டில் மர நிழலில் தலை வைத்துக்கொண்டு உடம்பு வெயிலில் படும்படி நீட்டிக்கொண்டு கதைப் புத்தகம் படிப்பார்கள், கோடை கால இரவுகளில் ஐந்தாறு பேர் மரத்தடியில் ஜமுக் காளத்தை விரித்துக் கொண்டு அதன் மேலமர்ந்து சீட்டா டுவார்கள்.

மனிதர்கள் நடமாட்டமில்லாத நேரத்தில் ஆடுமாடுகள் மரத்தடியில் ஆனந்தமாகப் புல் மேய்ந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

மேலே பறவைகளின் கீச்சு மூச்சு ஒலி, சிறகுகள் படபடக்கும் அரவம், அலகோடு அலகு உரசிக்கொள்ளும் ஒலி. இடையிடையே காற்றில் கிளைகள் ஆடும், இலைகள் அசையும்.

சில சமயம் பறவைகளே இருக்காது. காற்றில் சலனமும் இருக்காது. மரம் அசைவற்று நிற்கும் - நிலத்தின்மேல் அடர்ந்த நிழலைப் பரப்பிக் கொண்டு - யுகயுகமாய் – எல்லையற்ற காலத்தின் சாட்சியாகத் தன்னந்தனியே நின்று கொண்டிருக்கும். அப்போது ஒரு தத்துவ ஞானி மௌன-மாக, சலனமின்றி உலகத்தைப் பார்ப்பது போலிருக்கும். வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகள், பாவத்தின் வெற்றி, புண்ணியத்தின் தோல்வி, இவற்றை யெல்லாம் பார்த்துத் திகைத்து வியக்கும் தத்துவ ஞானியாகக் காட்சியளிக்கும்.

**கடமையைச் செய், பலனை எதிர் பார்க்காதே!**

# பேசும் படங்கள்...!




A.Anet, Art Course




G.F.Rashna Doole, Art Course